பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 02 புதன்கிழமை 15.05.2024 கதிர் 189

# உயிர் நீத்த உறவுகளை நினைவேந்தும் தமிழர் உரிமையை நிராகரிக்க முடியாது

## முழு உரித்தும் அவர்களுக்கு உண்டு என்று பெருந்தலைவர் சம்பந்தர் காட்டமான அறிக்கை

**தமிழ் மக்கள் தங்களது உயிர் நீத்த உறவுகளை நினைவேந்துவதற்கான முழுமையான உரிமை உடையவர்கள். அது அவர்களின் அடிப்படை உரிமையாகும். அதனை நிராகரிக்கவே முடியாது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவரும், திருகோணமலை மாவட்ட** ☞ 2

## இது ரகசியம் அல்ல!

சுதந்திரக் கட்சியின் நீதிமன்ற அக்கப்போர் தாங்க முடியவில்லை. பதிலுக்குப் பதில் என்று மாறி மாறி நீதிமன்றங்களில் ஒரே மாதிரியான வழக்குகளைத் தாக்கல் செய்து நீதித்துறையையே கேலிக்குள்ளாக்கி வருகின்றார்கள்.

முதலில் சுதந்திரக் கட்சியின் தலைவராக மைத்திரி செயற்படுவதற்கு எதிராக சந்திரிக்காவால் நீதிமன்ற தடையுத்தரவு பெறப்பட்டது. பின்னர் சந்திரிகா அணி சார்பில் பதில் தலைவராக அமைச்சர் நிமல் சிறீபால டி சில்வா தெரிவு செய்யப்பட்டார். அதற்குப் பதிலடியாக மைத்திர அணியினர் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவை பதில் தலைவராக நியமித்தனர்.

சந்திரிகா தரப்பு மீண்டும் நீதிமன்றத்தை நாடி பதில் தலைவராக விஜயதாச செயற்படுவதற்கு எதிராக நீதிமன்ற உத்தரவைப் பெற்றது. அந்தத் தடை உத்தரவு இருக்கத்தக்கதாகவே, கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து மைத்திரிபால விலகிக்கொள்ள அவரது இடத்திற்கு அவரது அணியினரால் நீதி அமைச்சர் ☞ 2

## மேலும் 20 புனித தலங்கள்

இந்த ஆண்டு 20 புனிதத் தலங்கள் வர்த்தமானியில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே இவ்வருடம் 9 வழிபாட்டு தலங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹம்பாந்தோட்டை உத்தகந்தர ரஜமஹா விகாரை, குருநாகல் தம்பதெனிய ரஜமஹா விகாரை, மொனராகலை பிரிவுபியங்கல ரஜமஹா விகாரை, புத்தளம் வெஹெரகல ரஜமஹா விகாரை, நுவரெலியா பம்பரகலே ரஜமஹா விகாரை, கொழும்பு படபொத ஸ்ரீ சுதர்ஷனாராம புராண விகாரை, ஹம்பாந்தோட்டை வாந்துருப்ப தேரபுத்தாகய ☞ 2

## முள்ளிவாய்க்கால் கஞ்சிக்கு கல்முனையிலும் நேற்று தடை

### பொலிஸார் குவிக்கப்பட்டு நடவடிக்கை

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாண்டிருப்பு பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்க முற்பட்டவர்களை தடுப் பதற்கு நூற்றுக் கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டுப் பெரும் நடவடிக்கை எடுக்கப் பட்டது.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற ☞ 2

## பலஸ்தீனர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் ஏன் இரட்டை வேட நாடகம்?

### நாடாளுமன்றத்தில் சுமந்திரன் எம்.பி. சாட்டை

பலஸ்தீனம் தொடர்பிலும் இலங்கைத் தமிழர்கள் தொடர்பிலும் ஏன் இரட்டை வேடம் போடுகின்றீர்கள் என்று இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்துக் கேள்வி எழுப்பினார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பலஸ்தீன விவகாரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பலஸ்தீனத்தின் இன்றைய நிலைமை மிகவும் பாரதூரமானதுடன், கவலைக்குரியது. இந்த நிலைமையை எவரும் அலட்சியப்படுத்தக்கூடாது.

இந்நிலையில் இந்த நாடாளுமன்றத்தில் இரு தலைப்பட்சமாக ☞ 8

### முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலை தடுப்பதன் மூலம்

## நினைவுகூரலை நிறுத்துவதே ஆளும் தரப்பினரின் நோக்கம்

### அம்பிகா சற்குணநாதன் குற்றச்சாட்டு

இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதிகாலப் பகுதிகளில் இடம்பெற்ற கொடுரங்கள் மற்றும் வன்முறையை நினைவுகூருவதை நிறுத்துவதே ஆளும் தரப்பின் நோக்கம் என்பதை முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்படுவதை தடைசெய்யும் ஆளும் தரப்பின் தொடர்ச்சியான நடவடிக்கைகளும் அதற்காக தெரிவிக்கப்படும் காரணங்களும் தெளிவாக வெளிப்படுத்துகின்றன என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலுக்கு இலங்கையின் மற்றுமொரு நீதிமன்றமும் ☞ 8

## கடும் அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் மட்டக்களப்பில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

இனப்படுகொலை வாரத்தின் மூன்றாம் நாளான நேற்று மட்டக்களப்பில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நடவடிக்கைகள் பொலிஸாரின் பல்வேறு தடைகளையும் அச்சுறுத்தலையும் மீறி நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் ஏற்பாட்டில் நேற்று மூன்றாவது நாளாகவும் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வு மட்டக்களப்பு நகரில் விமானநிலைய வீதியில் உள்ள ஸ்ரீ பரிபூர்ண விநாயகர் ஆலயத்திற்கு முன்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க தலைவி அமலநாயகி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன், ☞ 8

## மாணவருக்கான 'சிசு செரிய' பேருந்து சேவையை விரிவாக்க நடவடிக்கை

### போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

அடுத்த வருடம் பாடசாலை மாணவர்களுக்கு மேலும் 500 'சிசு செரிய' பேருந்து சேவைகளை வழங்கி அதன் எண்ணிக்கையை 2000 வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் கலந்துரையாடியுள்ளேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தற்சமயம், பாடசாலை ☞ 8

## ஏற்கனவே பணம் ஒதுக்கப்பட்டுள்ளதால் ஜனாதிபதி தேர்தல் இந்த ஆண்டு நடக்கும்

### அமைச்சர் பந்துலவின் எதிர்பார்ப்பு இது

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதால் இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசதகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ☞ 8

## கல்முனை வாழ் தமிழ் மக்களுக்கு பிரதேச செயலகம் கிட்ட முழு ஆதரவு

### முஸ்லிம் காங்கிரஸின் ஹரிஸ் எம்.பி. அறிவிப்பு

கல்முனை தமிழ் மக்களுக்குப் பிரதேச செயலகம் வழங்குவதற்கு நாங்கள் முழு ஆதரவு வழங்குவோம் என்று இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.பி. எச்.எம்.எம். ஹரீஸ் நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் அமைக்கப்படுவதற்கு எதிராகச் செயற்படும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் என்று இவர் மீது தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில் நேற்று அவர் இவ்வாறு அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பலஸ்தீனத்தின் இன்றைய நிலை தொடர்பான சபை ஒத்திவைப்பு ☞ 8

## புலிகள் அமைப்பை மீண்டும் தடை செய்தது இந்திய அரசு

தமிழீழ விடுதலைப் புலிகளை சட்டவிரோத அமைப்பாகவும் தடை செய்யப்பட்ட அமைப்பாகவும் இந்தியா மீளவும் பிரகடனம் செய்துள்ளது.

இந்திய மத்திய உள்துறை அமைச்சு 5 வருடங்களுக்கு தடை உத்தரவினை நீடித்து அறிக்கை மூலம் இதனை அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையைத் தளமாகக் கொண்டுள்ள போதிலும் அதன் ஆதரவாளர்களும் அபிமானிகளும் முகவர்களும் இந்தியாவிலும் இருப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவின் இறைமைக்கும், பிராந்திய ஒருமைப்பாட்டுக்கும் அச்சுறுத்தலாக இருப்பதாக இந்திய மத்திய உள்துறை அமைச்சு சுட்டிக்காட்டி ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

# 5 லட்சம் ஏக்கர் புதிய காணிகளில் பயிர்ச் செய்கைக்கு அரசு திட்டம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

விவசாயத்தைமேம்படுத்தினால் மட்டுமே கிராமப்புற மக்களின் வறுமையை ஒழிக்க முடியும். எனவே 5 இலட்சம் ஏக்கர் புதிய காணியில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அதுருகிரிய தேசிய தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் புதிய கல்வி மற்றும் நிர்வாக கட்டடத்தை நேற்றுதிறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பெருந்தோட்டத்துறைக்குத் தேவையான புதிய திறன்களைக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்கவும் இளைஞர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்தவுமாக இந்தத் தேசிய தோட்ட முகாமைத்துவ நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

1978ஆம் ஆண்டு முதல் பெருந்தோட்டக் கைத்தொழிலுக்கான பயிற்சி நிறுவனம் ஒன்று தேவைப்பட்டது. அன்று எம்.டி.எச். ஜெயவர்தனவின் இருப்பிடமாக விளங்கும் இந்தப் பகுதியில், இவ்வாறான பயிற்சி நிறுவனத்தை நிறுவுவதற்குத்தேவையானகாணி வழங்கப்பட்டது. அப்போது இந்தப் பகுதி நகரமயமாக்கப்படவில்லை.

2016ஆம்ஆண்டுபெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சராக நவீன் திசாநாயக்க இந்த நிறுவனத்தை நிறுவுவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து நிர்மானப் பணிகளை ஆரம்பித்தார். பின்னர் நியமிக்கப்பட்ட பெருந்தோட்ட அமைச்சர்கள் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தநிறுவனத்தைஅபிவிருத்தி செய்யும்போது, ஒரு வளாகத்தை தோட்டப் பகுதிக்கு மாற்றுவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும். கண்டி, மாத்தளை மாவட்டங்களைப் போன்று அனைத்து முக்கிய பயிர்களும் பயிரிடப்படும் மாவட்டத்தில் ஒரு வளாகத்தை திறப்பது மிகவும் முக்கியமானது. இந்தத் தொழிற்துறையில் பணிபுரிந்த எனது நண்பர்கள் பயிற்சிக்காக நுவரெலியா செல்ல வேண்டியிருந்தது. நமது விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் இத்தகைய நிறுவனங்கள் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும். வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரம் இன்று மீண்டும் கட்டியெழுப்பப்படுகிறது. விவசாயத்தின் மூலம் இந்த நிலையை அடைய வாய்ப்பு கிடைத்தது.

நான் நாட்டைப் பொறுப் பேற்றபோது, நாட்டில் விவசாய உற்பத்தி தடைப்பட்டிருந்தது. மேலும், ஐரோப்பியபொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததால், நமதுஆடைத் தொழிலுக்கு ஏற்றுமதி வாய்ப்புகள் இருக்கவில்லை. எனவே முதலில் இந்த நாட்டில் நெற்பயிர்ச் செய்கையை அபிவிருத்தி செய்ய பாடுபட்டோம். 2022, 2023 இல் சிறுபோகம் மற்றும் 2023இல் பெரும்போகம் என்பன வெற்றியளித்ததன் காரணமாக, இந்த திட்டத்தைத் தொடர எங்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. அதன்படி, விவசாயத்தின் ஊடாக நாட்டின் பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட்டது என்றே கூற வேண்டும்.

இப்போது இந்த நாட்டுக்கு கடன் வழங்கிய நாடுகளுடனும் ஏனைய தனியார் கடன் வழங்குநர்களுடனும் பேச்சு நடத்தி வருகிறோம். முதல்கட்ட பேச்சு முடிந்த பிறகு, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் சவாலை எதிர்கொள்ள வேண்டும். மேலும் நாம் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த வேண்டும்.

கடனை அடைக்க எங்களுக்கு கால அவகாசம் மட்டுமே கிடைத்துள்ளது. எனவே, அதிலிருந்துவிடுபடுவதுசாத்தியமில்லை. மேலும் நாம் எப்போதும் கடனில் வாழ முடியாது. எனவே நாட்டின் பொருளாதாரத்தை ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்றும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

இந்த நாட்டில் ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான சட்ட வரைபுக்கு அமைச்சரவைஅங்கீகாரம்வழங்கியுள்ளது. இப்போது நாம் இந்த திட்டத்தை முன்னோக்கி செயல்படுத்த வேண்டும்.

வரலாற்று ரீதியாக நமது விவசாயம், ஏற்றுமதி விவசாயமாக மாறிவிட்டது. சிங்கள மன்னராட்சியின் போது தானியங்கள் பயிரிடப்பட்டன. மேலும், ஈர மண்டலத்தில் வாசனைப் பொருட்கள் பயிரிடப்பட்டன. வெள்ளையர்களின் வருகைக்குப் பின் தேயிலை, தென்னை, இறப்பர் என்பன பயிரிடப்பட்டன. ஆனால் சுதந்திரத்திற்குப் பிறகு நாம் ஒரு நாடாக முன்னேறவில்லை. சுதந்திரத்திற்குப் பின்னர் டி.எஸ். சேனநாயக்கவினால் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் நாம் அரிசியில் மட்டுமே தன்னிறைவு அடைய முடிந்தது.

இப்போது நாட்டில் விவசாயத்தை நவீனமயமாக்கவும், ஏற்றுமதி விவசாயத் தொழிலை மேம்படுத்தவும் தேவையான முயற்சிகளை முன்னெடுத்து வருகிறோம். தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு ஆகியவை நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பயிர்களாக மாறியுள்ளன.

வெள்ளையர்கள் விரட்டப்பட்டு தோட்டங்களை நாம் கையகப்படுத்தியதால் அவர்கள் கென்யாவில் தேயிலை உற்பத்தியை ஊக்குவித்து எமக்கு போட்டியாக செயற்படுகின்றனர். வியட்நாமும் இறப்பர் செய்கையை மேம்படுத்தி இலங்கையுடன் போட்டியிடுகிறது. எனவே, இந்தப் போட்டியை எதிர்கொள்ளும் வகையில் தோட்டத் தொழிலை மாற்றியமைக்க வேண்டும்.

தற்போது விவசாயத்தை பலப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. அதனால் நாம் தோட்டங்களை விவசாய வர்த்தகமாக மாற்றி உற்பத்தியை பலப்படுத்த வேண்டும். தேயிலை மற்றும் இறப்பர் செய்கையை ஊக்குவிக்க வேண்டும். அதற்கான சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இன்று எமது தேயிலை தொழில் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. பல நிறுவனங்கள் அதனை சாதகமாக செய்கின்றன.

நாட்டின் பாரம்பரிய பயிர் உற்பத்தியைப் பலப்படுத்த வேண்டும். நமது நாடு கோகோவா, கருவா மற்றும் ஏனைய மசாலாப் பொருட்களையும் மீண்டும் நடுகை செய்ய வேண்டும். புதிய பயிர்களைவிளைவிக்கவேண்டும். அதற்காக இத்துறைக்கு புதிய தொழில்நுட்பமுகாமைத்துவத்தை அறிமுகப்படுத்த வேண்டும். இரண்டாவதாக, உற்பத்தியை அதிகரிக்க சிறு தோட்ட உரிமையாளர்களையும் இந்த நவீனமயமாக்கல் திட்டத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும்.

விவசாயத்தைமேம்படுத்தினால் மட்டுமே கிராமப்புற மக்களின் வறுமையை ஒழிக்க முடியும். எனவே தற்போதுள்ள பயிர்கள் மற்றும் காணிகளையும் சிறந்த முறையில் பயன்படுத்தி 5 இலட்சம் ஏக்கர் புதிய காணியில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம். அதற்கு நவீன விவசாயமும், நவீன விவசாய வர்த்தகமும் அவசியம். இந்த நாட்டில் விவசாயத்தை முக்கிய ஏற்றுமதி துறையாக மாற்ற வேண்டும்.

எதிர்காலத்தில் இலங்கையை சூழவுள்ளநாடுகளின்சனத்தொகை பல பில்லியன்களால் அதிகரிக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. பெருகிவரும் உலக மக்கள் தொகைக்கு உணவுச் சந்தையை வழங்க நாம் தயாராக இருக்க வேண்டும். பழைய தோட்டத் தொழிலுக்குப் பதிலாக புதிய விவசாயவியாபாரத்தைஉருவாக்கி நாட்டை பொருளாதார ரீதியாக முன்னேற்ற வேண்டும். புதிய சட்டத்தின்ஊடாகநிறுவனங்களுக்கு இடையில் போடப்பட்டிருக்கும் தடைகள் அனைத்தையும் நீக்கி சகலரும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான சூழலை உருவாக்கஎதிர்பார்க்கிறேன்' -என ஜனாதிபதி தெரிவித்தார்.

## இனி இது .....

விஜயதாச தெரிவு செய்யப்பட்டார். அதுமட்டுமல்ல அப்படித் தெரிவு செய்யப்பட்ட விஜயதாசவிற்கு எதிராக மற்றைய அணியினர் தடைகளை ஏற்படுத்தக்கூடாது என்று நீதிமன்றத்திற்குச் சென்று ஒரு உத்தரவையும் பெற்றுள்ளனர் அந்த அணியினர்.

அதாவது விஜயதாச பதில் தலைவராகச் செயற்படுவதற்கு ஒரு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு வழங்கியுள்ளது. அதேநபர் (விஜயதாச) தலைவராகச் செயற்படுவதைத் தடுக்கக்கூடாது என்று இன்னொரு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு வழங்கியுள்ளது.

விட்டேனா பார் என்று இப்போது சந்திரிக்கா தரப்பு மற்றொரு வழக்கைத் தாக்கல் செய்துள்ளது. சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவர் நிமல் சிறிபால டி சில்வாவிற்கும் பதில் செயலாளர் துமிந்த திசாநாயக்கவிற்கும் கட்சியின் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தடை ஏற்படுத்த வேண்டாம் என உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி, நேற்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்கவினால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் புதிய தவிசாளர், அமைச்சர் விஜேதாச ராஜபக்ச கட்சியின் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தடையேற்படுத்துவதை தவிர்க்குமாறு கடுவலை மாவட்ட நீதிமன்றம் சிலதரப்பினருக்கு நேற்று தடையுத்தரவு பிறப்பித்திருந்தது.

துமிந்த திசாநாயக்கவின் மனு கொழும்பு பிரதம மாவட்ட நீதிபதி சந்துன் விதானகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இருதரப்பு சட்டத்தரணிகளும் தமது வாதங்களை முன்வைத்தனர்.

விஜேதாச ராஜபக்ச உள்ளிட்ட தரப்பினருக்கு எதிராக இந்தத் தடையுத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளதுடன், சரத் ஏக்கநாயக்க, விஜேதாச ராஜபக்ஸ, கீர்த்தி உடவத்த, நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

மே 12 , சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு கூட்டம் என்ற பெயரில் நடத்தப்பட்ட கூட்டத்தில், விஜேதாச ராஜபக்ஸ, சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளராக நியமிக்கப்பட்ட போதிலும் அந்தக் கூட்டம் சட்டபூர்வமானதல்ல என துமிந்த திசாநாயக்கவின் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு குடியியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 6ஆம் சரத்திற்கமைய, தமக்கு உரிமை உள்ளதாகவும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், விஜேதாச ராஜபக்ச சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, அடிப்படை ஆட்சேபனைகளைதெரிவித்ததுடன், மனு மீதான பரிசீலனையைத் தொடர அனுமதிக்க வேண்டாம் எனக்கேட்டுக்கொண்டார். எனினும், மனு மீதான விசாரணையை தொடர அனுமதிக்கவேண்டும் என மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சந்தன ஜயசுந்தர வாதிட்டார்.

இரு தரப்பு வாதங்களையும் கருத்தில் கொண்டு, மனுவை தொடர அனுமதிப்பதா, இல்லையா என்பது குறித்து நாளை உத்தரவு பிறப்பிக்கப்படும் என மாவட்ட பிரதம நீதிபதி தெரிவித்தார்.

மொத்தத்தில் வடிவேல் பகடி மாதிரி நிமல் சிறீபால டி சில்வாவும் விஜயதாசவும் சுதந்திரக் கட்சியின் தலைவர்களாக "இருக்கினம் ஆனால் இல்லை". இவர்கள் தங்களுக்கு இடையிலான குழுச் சண்டையால் கட்சியையும் அரசியல்வாதிகளையும் நாறடிப்பதைக்கூட ஏற்றுக் கொள்ளலாம், அது அவர்களுக்குப் பழகிய விடயம்தானே என்று. ஆனால் நீதித் துறையையும் சேர்த்த நாறடிக்கப் பார்க்கிறார்களே என்பதைப் பார்க்கும்போதுதான், அதுவும் நீதி அமைச்சரே நீதிமன்றங்களை விளையாட்டுப் பொருள் போன்று தூக்கிப் போட்டு விளையாடுவதைப் பார்க்கும்போதுதான் பகீர் என்கிறது.

திருகோணமலையில் ஒரு வழக்குக்கே எனக்கெதிராகச் சதி செய்கிறார்கள் என்று அழுது புலம்பும் தமிழ் அரசுக் கட்சியின் தெரிவு செய்யப்பட்ட தலைவர் சுதந்திரக் கட்சியின் வழக்குகளைக் கூர்ந்து அவதானிப்பது நல்லது. அதிலிருந்து 'இன்ஸ்பயர்' ஆகி நம் ஆட்களும் வழக்கு மேல் வழக்கு நீதிமன்றத்துக்கு மேல் நீதிமன்றம் என்று இழுத்தடிக்க வெளிக்கிட்டால் அதை எந்த வகையான சதியென்று குறிப்பிட்டுப் புலம்பமுடியும் என்று அப்போதுதான் முன்கூட்டிய ஒரு தீர்மானத்திற்கு வரக்கூடியதாக இருக்கும்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## உயிர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டம், மூதூரில் உள்ள சேனையூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சியை விநியோகித்தவர்கள் இரவு நேரத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 27ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலைத் தடை செய்வதற்கு ஆளும் தரப்பு மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் கண்டித்து அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் வைகாசி மாதம் உணர்வுபூர்வமானது. அவர்கள் தமது உறவுகளைநினைவுகூருவதற்கான புனிதமான மாதம் இது.

அவர்கள் போரில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவு கூருவதற்கு முழுமையான உரித்துடையவர்கள். அவர்களின் அந்தஅடிப்படைஉரித்தினையாரும் நிராகரிக்கவே முடியாது. அவ்வாறு நிராகரிப்பதற்கு இடமளிக்கமுடியாது.

அவ்வாறு இடையூறுகளை ஏற்படுத்துவதும், நிராகரிப்பதும் அடிப்படைச் சட்டங்களை மீறுவதாகும். அதேநேரம், திருகோணமலை மூதூரில் தமது உறவுகளை நினைவு கூர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். கல்முனையில் நினைவுகூரல் தடுக்கப்பட்டுள்ளது.

இது அடிப்படை மனித உரிமை மீறலாகும். இவ்விதமான செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றேன். அத்துடன், கைது செய்யப்பட்டவர்கள் தாமதமின்றி விடுவிக்கப்படுவதற்கு ஆளும்தரப்பு உரியநடவடிக்கைகளைஎடுக்குமாறு பகிரங்கமான கோரிக்கை விடுகின்றேன்.

எமது மக்களின் உரிமைகளைக் கடந்த ஏழு தசாப்தமாக பறிந்து வருகின்ற நிலையில்தான் சமஷ்டி அடிப்படையிலானஅதிகாரங்களைப் பகிருமாறு கோரிவருகின்றோம் என்றார்.

## முள்ளிவாய்க்கால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவத்தால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. இச்சம்பவத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் மாவட்ட அமைப்பாளர் புஸ்பராஜ் துஷானந்தன், அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி ஆகியோர் பொலிஸாரினால் மிரட்டப்பட்டுக் குறித்த நிகழ்வு தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இதன்போது கல்முனை பாண்டிருப்பு, அரசடி அம்மன் ஆலய முன்றலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கம் பொதுமக்களுடன் இணைந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வினை முன்னெடுத்திருந்தது. எனினும் சம்பவ இடத்திற்கு வருகை தந்த பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்க தலைமையிலான பொலிஸார் கல்முனை நீதிவான் நீதிமன்ற தடை உத்தரவைக் காண்பித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் மாவட்ட அமைப்பாளர் புஸ்பராஜ்துஷானந்தன்என்பவருக்கு தடை உத்தரவு உள்ளதாகவும், முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களை நினைவுகூரும் முகமாக ஏற்பாடு செய்துள்ள குறித்த நிகழ்வினை நிறுத்துமாறு கூறி நீதிமன்றத் தடை உத்தரவை வழங்கினர்.

அத்துடன் ஏனைய அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டசங்கத்தலைவிதம்பிராசா செல்வராணி ஆகியோருக்கு பொலிஸாரினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டு அவ்விடத்தில் இருந்து செல்லுமாறு எச்சரித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இது தவிர, கடந்த நேற்றுமுன்தினம் (12) இரவு முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களை நினைவுகூரும் முகமாகச் செயற்பட்ட குற்றச்சாட்டில் திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சேனையூர் பகுதியில் 3 பேரும் பல்கலைக்கழக மாணவி ஒருவருமாக நால்வர் சம்பூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மேலும் 20....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரஜமஹா விகாரை, கேகாலை கடிகமுவ ஸ்ரீநாகவனாராமய மற்றும் மாத்தளை க்ஷேத்திராராம ரஜமஹா விகாரை ஆகியன வர்த்தமானியில் வெளியிடப்பட்டதாகும்.

இம்முறை அரச வெசாக் பண்டிகையை மாத்தளை நகரத்தை மையமாகக் கொண்டு மே 21 முதல் மே 27 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மாத்தளை க்ஷேத்ராராமரஜமஹாவிகாரையை வழிபாட்டுத் தலமாக அபிவிருத்தி செய்வதற்கான சன்னஸ் பத்திரம் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெறவுள்ளது.

புனிதத் தலத்தை அறிவிக்கும் போது 3 அளவுகோல்களின்படி அது நடைபெறுவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டினார். தேசிய பருவகால மற்றும் பிரதேச முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

இதுவரையில் கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளை புனிதத் தலங்களாகப் பிரகடனப்படுத்துமாறு ஆராய்ந்து பிரச்சினைக்குரிய நிலைமைகளை ஆராய்ந்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு ஏற்கனவே பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# ரணில் ஓர் மீட்பர் அல்லர்: ஒரு பொருளாதார அடியாள் சர்வதேச நிதி நிறுவனங்களின் தாழ்பணியும் சேவகர்

## பொ. ஐங்கரநேசன் சாடல்

ராஜபக்ஸ சகோதரர்கள் அரியணையில் இருந்து துரத்தப்பட்டு அவ்விடத்துக்கு ரணில் விக்கிரமசிங்க இரண்டு வருடங்களுக்கு முன்னால் ஜனாதிபதியாகப் பிரதியீடு செய்யப்பட்டார்.

அவர் ஒரு பொருளாதார நிபுணர் , சரிந்திருக்கும் பொருளாதாரத்தைத் தூக்கி நிமிர்த்துவார்,அடித்தட்டுமக்களின் வாழ்வு மேம்படும் என்று சொல்லியே முன்னிறுத்தப்பட்டார்.

ஆனால் , இன்று இலங்கையின் சனத்தொகையில் கால்வாசிக்கும் அதிகமான மக்கள் வறுமையில் வாடுகின்றனர். 2019 ஆம் ஆண்டு பதினொரு சதவீதமாக இருந்த வறுமை இந்த ஆண்டு இருபத்தியாறு சதவீதமாக அதிகரித்திருக்கிறது.ரணில் மீட்பர் அல்லர். அவர் ஒரு பொருளாதார அடியாள் . உலக வங்கி , நாணய நிதியம் ஆகிய சர்வதேச நிதி நிறுவனங்களின் தாழ்பணியும் ஒரு சேவகராகவே அவர் செயற்பட்டுவருகின்றார் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ ஐங்கரநேசன் கடுமையாகச் சாடியுள்ளார்.

பொருளாதாரரீதியாக மிகவும் பின்தங்கிய குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகளை வழங்கிவைக்கும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் அற்றார் அழிபசி தீர்த்தல் நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் இடம்பெற்றது.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ ஐங்கரநேசன் இவ்வாறு சாடியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இலங்கையின் மக்கள் தொகைக கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத்திணைக்களம்2019ஆம்ஆண்டில்6,966ரூபாவக இருந்த தனி நபர் ஒருவரின் அடிப்படைத்தேவைகளுக்கான மாதாந்த செலவு இப்போது 17,014 ரூபாவாக உயர்ந்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.

உலக வங்கி தன்னுடைய அறிக்கையில் இலங்கையில் அறுபது வீதமான குடும்பங்களின் வருமானம் வீழ்ச்சிஅடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. வாங்கும் திறன் குறைந்ததால் உணவுப்பாதுகாப்பின்மை, ஊட்டச் சத்துக்குறைபாடு , வளர்ச்சிக்குறைபாடு என்பவற்றை மக்கள் எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளார்கள்.

பொருளாதார மறுசீரமைப்பு என்ற பெயரில் சர்வதேச நாணய நிதியம் விதிக்கும்கட்டளைகளைசிரமேற்கொண்டு அரசாங்கம் நடைமுறைப்படுத்துகின்ற வரி விதிப்பு முறைகள், அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றம் எல்லாம் சேர்ந்து சமூகத்தின் மீது தொடுத்திருக்கும் தாக்குதலின் விளைவுகள்தான் இவை.



நாணய நிதியத்தின் சொற்கேட்டு அரச நிறுவனங்களைத் தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளாலும் , மூடும் நடவடிக்கைகளாலும் இலட்சக்கணக்கான மக்களின்வேலைகளைஇல்லாதொழிக்கும் நடவடிக்கைகளில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டு வருகின்றார்.

நாளுக்கு நாள் வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. ஆனால் ,அமெரிக்கப் பேரரசு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார நடவடிக்கைகளை அவ்வப்போது வானளாவப் புகழ்ந்து தள்ளுகின்றது.

இதன் பொருள் ரணில் நிறுவனங்களுக்கும் பெரும் பன்னாட்டு வணிக நிறுவனங்களுக்கும் இவற்றுக்கூடாகத் தங்களுக்கும் சிறந்த சேவகராக ,ஒரு பொருளாதார அடியாளாக இருக்கின்றார் என்பதுதான்.

ரணில் விக்கிரமசிங்கவை அடிக்கடி வெளிப்படையாகப் பாராட்டுவதன் மூலம் அவரை ஒரு பொருளாதார மீட்பராக மக்கள் மத்தியில் கட்டமைக்க அமெரிக்கா விரும்புகின்றது. ஜனாதிபதி தேர்தல் நெருங்கும் சமயத்தில் இந்த விம்பம் அவரை வெல்ல வைக்கும் என்றும் அமெரிக்கா நினைக்கின்றது.

இலங்கையின் ஜனாதிபதியாக யார் வரவேண்டும் என்பதை வல்லாதிக்க

சக்திகளே தீர்மானிக்கின்றன. அதற்கேற்ப மக்களை, வாக்காளர்களை, மக்கள் பிரதிநிதிகளை மூளைச் சலவை செய்யும் வேலைகள் கனகச்சிதமாக இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. எமது மக்கள் இவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும். - என்றார்.(05)

# சம்பூரில் பெண்கள் பொலிஸாரால் தாக்கப்பட்ட விவகாரம் பொலிஸாருக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுக்குக

## இளம் பத்திரிகையாளர் சங்கம் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு கடிதம்



திருகோணமலை சம்பூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சியை தயாரித்து வழங்கிய பெண்களிற்கு எதிராக இலங்கை பொலிஸார் செயற்பட்ட விதம் குறித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் என இலங்கை இளம் பத்திரிகையாளர்கள் சங்கத்தின் தரிந்துஜெயவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தரிந்து ஜெயவர்த்தன இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

சம்பூர் விவகாரம் தொடர்பில் - இலங்கைபொலிஸாரின்நடவடிக்கைகள் தொடர்பில் - விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் இலங்கை அரசமைப்பின் பல பிரிவுகளின் கீழ்; நடவடிக்கை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம் என தரிந்து ஜெயவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை அரசமைப்பால் உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறும் விதத்தில் இலங்கை பொலிஸார் நடந்துகொண்டனர் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தீர்ப்பளிக்கவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொலிஸ்மா அதிபரும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும் மனித உரிமைகளை மீறிய அதற்கு உதவிய பொலிஸ்உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்எனமனிதஉரிமைஆணைக்குழு பரிந்துரை செய்யவேண்டும் எனவும் அவர் தனது கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பெண்களை ஈவிரக்கமற்ற விதத்தில் - மனிதாபிமானமற்ற விதத்தில் - இழிவான விதத்தில் - நடத்திய பொலிஸாருக்கு எதிராக சித்திரவதை சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொலிஸ்மா அதிபருக்கும் சட்டமா அதிபருக்கும் மனித உரிமை ஆணைக் குழுபரிந்துரைசெய்யவேண்டும்எனவும் தரிந்து ஜெயவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.(05)

# ஆளும்தரப்பு நினைவேந்தலை தடுப்பது நல்லிணக்கத்திற்கு அடிக்கும் சாவு மணி

## மு.சந்திரகுமார் சுட்டிக்காட்டு



சர்வதேசத்தின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட நிலைமாறுகால நீதி பொறிமுறையில் நினைவேந்தல் மிக முக்கிய பகுதியாகும். எனவே அந்த நினைவேந்தல் நிகழ்வை கூட தமிழ் மக்கள் மேற்கொள்ள முடியாத படி அரசும் அதன் கட்டமைப்பான பொலிஸாரும் மேற்கொள்ளும் தடை நடவடிக்கைகள் இந்த நாட்டின் நல்லிணக்கத்தின் மீது அடிக்கும் சாவு மணியே, என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் -

2009 இல் இடம்பெற்ற இறுதியுத்தத்தில் ஏராளமான மக்கள் கொல்லப்பட்டார்கள், கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்ந்து தங்களை ஆற்றுப்படுத்திக்கொள்வதற்கு கூட முடியாத அளவுக்கு இலங்கையில் தமிழ் மக்கள் மீது அடக்கு முறை பிரயோகிக்கப்படுகிறது. தெற்கிற்கு ஒரு நீதி வடக்கிற்கு ஒரு நீதி என்ற நிலைப்பாட்டில் தமிழ் மக்கள் மீதான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தசிறியதீவில்இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டிய அரசும் அதன் கட்டமைப்பு பாரபட்சமாக நடந்து கொள்வது என்பது ஒரு காலமும் இனங்களுக்குஇடையேநல்லிணக்கத்தை ஏற்படுத்தாது.

இனங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்படாத போது இலங்கையில் ஒரு போதும் நிலையான சமாதானம் ஏற்படாது எனத் தெரிவித்த அவர் யுத்தம் முடிவுக்கு வந்து 15 வருடங்கள் ஆகின்ற போதும் இனங்களுடைக்கிடையே இடைவெளியும் கூடிக்கொண்டே போகிறதே தவிர குறைவதாகத் தெரியவில்லை.

பாதிக்கப்பட்ட ஓர் இனத்தின் உணர்வுகளை புரிந்துகொண்டு, நல்லிணக்கத்தை வலுப்படுத்த வேண்டுமே தவிர வெற்றிபெற்ற மனநிலையில் இருந்து கொண்டு தமிழ் இனத்தைக் கையாள்வது கவலைக்கும் கண்டனத்திற்கும் உரியது. எனவே, இந்த அரசு உடனடியாக தமிழ் மக்கள் மீதான இவ்வாறான அடக்கு முறைகளைக் கைவிட வேண்டும்.

உறவுகளை நினைவேந்தும் உரிமைகளில் அரசோ அதன் கட்டமைப்போ தலையிடக்கூடாது. தமிழ்மக்களை தொடர்ந்தும் காயப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவதை நிறுத்தி நல்லிணக்கத்தை வளர்தெடுக்க முயற்சிக்க வேண்டும் என்றும் சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.(05)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ஏன் இந்த இரட்டை வேடம்?

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆட்சியாளர்களையும் ஏனைய சிங்கள, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அரசுத் தரப்பைச் சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பார்த்து எழுப்பிய கேள்வி மிக நியாயமானது. எதிராளிகளின் மனச்சாட்சியை உலுப்ப வேண்டியது. குறிப்பாக அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஏனைய அமைச்சர்கள் மனிதர்களாக இருந்து அவர்களுக்கு மனச்சாட்சி என்று ஒன்று இருந்தால் அவர்களை வெட்கித் தலைகுனிய வைக்கக்கூடிய கேள்வி அது.

பலஸ்தீனத்தின் இன்றைய நிலவரம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் முன்வைத்த பிரேரணையின் மீதான விவாதத்தின் போதே சுமந்திரன் அந்தக் கேள்வியை எழுப்பினார். பலஸ்தீனத்தில் நடப்பது ஏற்றுக்கொள்ள முடியாத, மனிதகுலத்தால் சகித்துக்கொள்ள முடியாத மனிதப் படுகொலைகள். அதையும் தாண்டி இஸ்ரேலிய அரசு நிகழ்த்தும் இனப்படுகொலைகள். மேற்குக்கரையைத் தாண்டி காஸாவையும் ஆக்கிரமித்துக்கொள்வதற்காக இஸ்ரேலின் நோக்கத்துக்காக நடத்தப்பட்டுவரும் இனச் சுத்திகரிப்பு. அதனை யாரும் நியாயமானது என்று ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்தப்போரில் பலஸ்தீனர்கள் பக்கத்தில் உள்ள நியாயத்தை இந்த உலகம் முழுவதுமே ஏற்றுக்கொண்டிருக்கின்றது. இஸ்ரேலின் மிலேச்சத்தனமான செயற்பாட்டையும் உலகம் கண்டிக்கிறது. தமிழர்களாகிய நாங்களும் அதனைக் கண்டிக்கின்றோம், இஸ்ரேலின் இனப்படுகொலை நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். இஸ்ரேலின் மனிதாபிமானமற்ற போர் எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்பதில் இலங்கையின் ஏனைய மக்கள் பிரதிநிதிகளின் கருத்துடன் யாருக்கும் எந்த முரண்பாடும் இல்லை.

ஆனால், அதேபோன்ற பார்வையும் அணுகுமுறையும் பரிதாபமும் பட்சாதாபமும் ஏன் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இல்லை என்பதுதான் அவர்களைப் பார்த்து எழுப்பப்படும் கேள்வி. அதனைத்தான் சுமந்திரன் அவர்களிடம் நேரடியாகவே எழுப்பினார். பலஸ்தீனம் தொடர்பிலும் இலங்கைத் தமிழர்கள் தொடர்பிலும் ஏன் இரட்டை வேடம் போடுகின்றீர்கள் என்று கேட்டார் சுமந்திரன்.

மனித உரிமைகள், சர்வதேச மனித உரிமை சட்டங்கள், இனப்படுகொலை உள்ளிட்ட சர்வதேச குற்றங்கள் தொடர்பில் அவர்கள் பேசுகின்றனர். ஒரு நாட்டுக்குள் இடம்பெற்ற பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில் குறிப்பிட்டு பலஸ்தீன நிலைமை குறித்துப் பேசுகின்றனர்.

இந்தப் போர் ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் இடையேயான மோதலாகும். இலங்கையிலும் இதுபோன்ற நிலைமையே ஏற்பட்டது. அதனை உள்விவகாரம் என்றும், சர்வதேச குற்றச் செயல் அல்ல என்றும் கூறியவர்கள், பலஸ்தீன சம்பவத்தை உள்விவகாரம் என்று கூறுவதில்லை.

இந்த நேரத்தில் பாலஸ்தீனத்தில் இறக்கும் மக்கள் தொடர்பில் பேசிக்கொண்டு இருக்கின்றோம். ஆனால் இங்கே போரில் இறந்தவர்கள் நினைவுகூர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சிகூடப் பரிமாற முடியவில்லை. இது இரட்டை நிலைப்பாடு இல்லையா? பலஸ்தீனத்தின் மீது அக்கறை கொண்டுள்ளீர்கள். அந்த அக்கறை எங்கள் மக்கள் மீது இல்லையா? என்றும் கேட்டார் அவர்.

பலஸ்தீன விடயத்தில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பிலும், சர்வதேச தலையீடு அவசியம் என்றும் கூறும் நீங்கள் ஏன் எமது மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கூறும்போது உள்ளக விவகாரம் என்று கூறுகின்றீர்கள் என்று அவர் எழுப்பிய கேள்விக்கு எவரிடமும் பதிலிருக்காது என்பது நிச்சயம்.

இஸ்ரேல் தாக்குதலை நாங்கள் கடுமையாக கண்டிகின்றோம். ஆனால் அதே மனசாட்சியுடன் இங்கு 15 வருடங்களுக்கு முன்னர் நடந்தவை தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும். இந்நிலையில் உள்ளகப் பொறிமுறை என்று கூறிக்கொண்டு ஏன் இவ்வாறு நயவஞ்சகமாகச் செயற்படுகின்றீர்கள் என்றும் கடுமையாகச் சாடினார் சுமந்திரன். அவரது கேள்விகள் மனிதர்களால் நிறைந்திருந்தால் நாடாளுமன்றத்தின் மனச்சாட்சிகளை உலுப்பியிருக்கவேண்டும்.

# இணையத்தை விழிப்புணர்வுடன் பயன்படுத்த சில குறிப்புகள்

கல்லாநிதி



பலரையும் இணைக்கும் வலிமை படைத்த இணையம் அண்மைய ஆண்டுகளில் பல மடங்கு வளர்ச்சி கண்டு, திறன்பேசி மூலம் பலரது உள்ளங்கைகளில் வந்த இன்றியமையாத தொழில்நுட்பம் ஆகிவிட்டது. குறிப்பாக இளையர்களிடையே திறன்பேசி (ஸ்மார்ட்ஃபோன்) பயன்பாடு ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

அவ்வப்போது இளையர்களை சமூக ஊடகங்களில் இருந்து இடைவேளை எடுக்குமாறு ஆய்வாளர்கள் அறிவுறுத்துகின்றனர்.

பதின்ம வயதினருக்கு எப்போது, எங்கு திறன்பேசிகள் வழங்கப்பட வேண்டும் என்ற தெளிவான குறிக்கோள்களைப் பெற்றோர் அமைப்பது அவசியம் என்று பொது சுகாதார வல்லுநர்கள் பரிந்துரைக்கின்றனர்.

சமூகஊடகத்தளங்களையும்இணையத்தையும் பயன்படுத்துவதில் சில குறிப்புகளையும்; திறன்பேசி பயன்பாட்டில் இளையவர்கள் எவற்றைக் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும் என்ற பட்டியலையும் இக்கால இளையர்களிடம் பேசித் தயாரிக்க முயற்சிக்கிறது இந்தக் கட்டுரை.

## தனிப்பட்ட விவரங்களை வெளியிடவேண்டாம்:

முக்கியமான விவரங்களை இணையத்தில் பதிவு செய்வது தேவையற்ற கவனத்தை ஈர்க்கும். வீட்டு முகவரி, தொலைபேசி எண் போன்ற விவரங்களை இணையத்தில் பகிர்ந்து கொள்வதைத் தவிர்ப்பது நல்லது. இதுகுறித்த 14 வயது அஃப்ரீன் ஃப்யிசா கூறுகையில், 'என் நண்பர்கள், அல்லது குடும்ப உறுப்பினர்களின் விவரங்களை அவர்களின் அனுமதி இல்லாமல் சமூக ஊடகத்திலோ இணையத்திலோ வெளியிட மாட்டேன்,' என்றார்.



## சமூக ஊடக கணக்கு விவரங்களை பகிர வேண்டாம்:

சமூக ஊடக கணக்குகளை முடிந்தவரை பொதுமக்கள்பார்வைக்குவைத்திருக்காமல்இருப்பது பாதுகாப்பானதாகும். 'முன்பின் தெரியாதவர்களிடம் சமூக ஊடக கணக்கு விவரங்களைப் பகிர

மாட்டேன்,' என்றார் பாலகிருஷ்ணன் ஹரி பிருந்தா. அவரது வயது 13.



## இணையத்தில் உள்ள அனைத்தையும் நம்ப வேண்டாம்:

இணையத்தில் நாம் படிக்கும் அல்லது பார்க்கும் எதையும் நம்பாமல் இருப்பது ஒரு நல்ல நடைமுறை. பொதுவாக நமக்கு விருப்பமான ஒரு பொருள் அல்லது சர்ச்சை இருந்தால், அதைப்பற்றி மேலும் விசாரித்து தெளிவு பெறுவதே நன்மை தரும். 'குழப்பம் ஏற்படுத்தும் செய்திகளை பற்றி நன்கு ஆராய்ந்து எதிர் வாதங்களையும் கருத்தில் கொண்டு முடிவுக்கு வருவது தெளிவு கொடுக்கும். அதுபோல் மோசடிகள் மற்றும் இணைய மிரட்டல்களுக்கு பலியாகாமல் விழிப்புணர்வுடன் இருப்பதும் அவசியம்,' என்றார் 15 வயது மாணவி இங் ருய் ஆன்,

## குறுஞ்செய்தி அல்லது பதிவுகளை அனுப்பும் முன் ஒருமுறைக்கு இருமுறை யோசிக்கவேண்டும்:

உணர்ச்சிகள் பொங்கும் நேரத்தில், குறிப்பாக வருத்தமாகவோ கோபமாகவோ இருந்தால் சமூக ஊடகங்களில் உங்கள் ஆழ்மன உணர்வுகளையும் சிந்தனைகளையும் பகிர்வதைத் தவிர்க்கவும்.

## அந்நியர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்:

சமூக ஊடகங்களில் மோசடி சம்பவங்கள் அதிகரித்து வரும் சூழலில் நமக்கு தெரிந்தவர்களாக இருந்தாலும் இணையத்தில் அவர்களிடம் தனிப்பட்ட புகைப்படங்களைப் பகிர்வதைத் தவிர்க்க வேண்டும். 'சில நேரங்களில் நான் தனிமையில் இருந்தாலும் இணையத்தில் நண்பர்களைத் தேட மாட்டேன். மற்ற ஆக்கப்பூர்வமான பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபட முயற்சி செய்வேன். ஏனெனில் யார் உண்மையானவர் என்பதை இணையத்தில் கண்டுபிடிப்பது மிகவும் கடினம்,' என்றார் 14 வயதான நிதி சோமசேகர்.

## இணையத்தில் உள்ளவர்களுடன் ஒப்பிடவேண்டாம்:

இணையத்தில் உள்ள அனைவரும் தங்களது உண்மையான விவரங்களை அதில் பதிவிடமாட்டார்கள். எனவே நம்மை அவர்களுடன் ஒப்பிட்டுத் தாழ்வு மனப்பான்மை ஏற்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

காலைக்கதிர் Kalaikkathir

# தாதியர் சேவை ஸ்தாபகர் தினக் கொண்டாட்டங்கள்




(கே எ ஹமீட்)

தாதியர் சேவையின் ஸ்தாபகரானபுளோரன்ஸ்நைட்டிங்கேலின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 12ஆம் திகதி சர்வதேச தாதியர்தினம்கொண்டாடப்படுகிறது.

இந்த ஆண்டு சர்வதேச தாதியர் தினத்தின் கருப்பொருளாக நமது தாதியர்கள் - நமது எதிர்காலம், தாதியர் சேவையின் பொருளாதார சக்தி என்பதாகும்.

தாதியர் சேவையை உருவாக்கிய புளோரன்ஸ் நைட்டிங்கேலின் பிறந்த நாளே இவ்வாறு கொண்டாடப்படுகிறது.(05)



# அம்பாறை மாவட்ட அறபுக் கல்லூரி நிர்வாகிகள் அதிபர்களுக்கான கல்வி உளவியல் செயலமர்வு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள அறபுக் கல்லூரிகளின் நிருவாகிகள், அதிபர்களுக்கான கல்வி உளவியல் செயலமர்வு அட்டாளைச்சேனை ஷர்கிய்யா அறபுக் கல்லூரியில் வெகு விமரிசையாக நடைபெற்றது.


அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவின் ஏற்பாட்டில், அஷ்ஷெய்க் ஐ.எல்.எம்.ஹாஷிம் ஸூரி மதனி தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில், 35 அறபுக் கல்லூரிகளைச் சேர்ந்த சுமார் 90 பங்குபற்றுனர்கள் கலந்துகொண்டதுடன் நிகழ்வின் இறுதியில் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் அஷ்ஷெய்க் எம்.எம்.கலாமுல்லாஹ் - றஷாதி (அதிபர், அபூபக்கர் சித்தீக் அறபுக் கல்லூரி), 'கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவர்களை எவ்வாறு அணுக வேண்டும்? - ஓர் உளவியல் நோக்கு' எனும் தலைப்பிலும், அஷ்ஷெய்க் எம்.ஐ.அமீர் - நழீமி ( அமீர், சம்மாந்துறை மஜ்லிஸ் அஷ்ஷூறா, எல்லை நிர்ணய ஆணைக்குழு உறுப்பினர்), 'சமூக நலனில் அறபுக் கல்லூரிகள் மீதான பொறுப்புக்களும் கடமைகளும்' எனும் தலைப்பிலும், அஷ்ஷெய்க், கலாநிதி எம்.எல்.முபாறக்- மதனி (முதல்வர், தாருல் ஹுதா மகளிர் அறபுக் கல்லூரி, மருதமுனை), 'அறபுக் கல்லூரிகள் ஆளுமையுள்ள ஆலிம்களை எவ்வாறு உருவாக்க முடியும்' எனும் தலைப்பிலும் ஆழமானதும் அறிவுபூர்வமானதுமான அனுபவ ரீதியான உளவியல் கருத்துக்களை பங்குபற்றுனர்களின் கவனத்தை கவரும் வகையில் முன்வைத்தனர்.

அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவின் செயலாளர் அஷ்ஷெய்க் ஏ.எல்.நாஸிர் கனி - ஹாமியின் ஒருங்கிணைப்பிலும், மாவட்ட சபையின் உதவித் தலைவர்களில் ஒருவரான அஷ்ஷெய்க் எப்.எம்.எஸ்.ஏ.அன்ஸார் மௌலானா- நழீமியின் நெறியாள்கையிலும் நடைபெற்ற இச்செயமர்வுக்கான அனுசரணையை அட்டாளைச்சேனை ஷர்கிய்யா அறபுக் கல்லூரி பொறுப்பேற்றிருந்தது.

மேலும், அட்டாளைச்சேனை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் யூ.எம்.நியாஸ் ஷர்கி மற்றும் அதன் செயலாளர் அஷ்ஷெய்க் என்.ரீ.நஸீர்- ஹாமி ஆகியோர் நிகழ்வு வெற்றிபெறத் தேவையான முழுமையான ஒத்துழைப்பை நல்கினர்.

மேற்குறித்த நிகழ்வு மாவட்ட ஜம்இய்யாவின் உதவிச் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எல். பைஸல்- காஷிபியின் நன்றியுரையைத் தொடர்ந்து கப்பாறதுல் மஜ்லிஸுடன் நிறைவு பெற்றதும் குறிப்பிடத் தக்கது.(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# குரவை ஒலி விண்ணைப் பிளக்க அம்மனுக்கு குளிர்த்திச்சடங்கு கல்யாணக்கால் நடப்பட்டது











( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருக்குளிர்ச்சி சடங்கு திங்கட்கிழமை மாலை கடல் நீர் எடுத்து, கல்யாண கால் முறித்து நடுதலுடன் ஆரம்பமானது.

முன்னதாக ஆலயத்தில் தர்மகத்தாக்கள், கப்புகனார்கள் நிருவாகிகள் சேர்ந்து விசேட பூஜை வழிபாடு இடம் பெற்று, பாரம்பரிய மரபு முறைப்படி பறைமேளம் அடித்து கடற்கரைக்கு சென்று அங்கு விசேட பூஜை இடம் பெற்று கடல்தீர்த்தம் எடுக்கப்பட்டது.

அங்கிருந்து நேராக வீதி முழுவதும் நடைபாவாடை விரிக்கப்பட்டு, கல்யாண கால் (பூவரசு மரக்கிளை) முறித்து எடுக்கப்பட்டு, பக்தர்களால் ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டது.

ஆலயத்தில் அதற்கான சடங்குகளை செய்து உரிய வேளையிலே அரோகரா கோஷம் மற்றும் குரவை ஒலிக்கு மத்தியில் கல்யாணக்கால் உணர்ச்சி பூர்வமாக சிறப்பாக நடப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் கூறைச் சாறிகளை அம்மனின் கல்யாண காலுக்கு சாத்தி வழிபட்டார்கள். மேலும் பலகாரங்கள் வெற்றிலை பாக்கு நைவேத்தியம் வைத்து வழிபட்டார்கள்.

ஆலய தர்மகத்தாக்களான பரமலிங்கம் இராஜமோகன் , இரா.குணசிங்கம் ,சா.கங்காதரன் தலைமையில் இம்முதல் நாள் சடங்கு சிறப்பாக நடைபெற்றது.

நேற்று முன்தினம் திங்கள் ஆரம்பமாகிய இச்சடங்கு தொடர்ந்து 08தினங்கள் நடைபெற்று 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30மணிக்கு திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடையும்.

நேற்று 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை சடங்குப்பூஜையும்ஊர்சுற்றுக்காவியம்பாடலும்இடம்பெறுகிறது.

தொடர்ந்து இன்று புதன்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து பகல் ஒரு மணிக்கு பூசையும் மாலை 7 மணிக்கு சடங்குப்பூசையும் ஊர்சுற்றுக்காவியம் பாடலும் இடம்பெறும்.

20ஆம் திகதி திங்கட்கிழமை பொங்கலுக்கான நெற்குத்தும் வைபவம் நடைபெறும்.மறுநாள் செவ்வாய் அதிகாலை குளிர்த்தி பாடப்பெறும்.

எட்டாம்சடங்கு 27ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு இடம்பெறும்.(05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர்
Kalaikkathir

## மேலும் 20....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2023 ஆம் ஆண்டில் 19 புனிதத் தலங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாக பௌதீக திட்டமிடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இதுவரை 130 புனிதத் தலங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. 1961 ஆம் ஆண்டு ஒக்டோபர் 16 ஆம் திகதி இலங்கையின் முதல் புனிதத் தலமாக கதிர்காமம் அறிவிக்கப்பட்டதுடன் இம்மாதம் மாத்தளை க்ஷேத்ராராம ரஜமஹா விகாரை இலங்கையின் 130ஆவது புனிதத் தலமாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது.

புனிதத்தலங்கள்வர்த்தமானியில் வெளியிடுவதற்கு தொல்பொருள் திணைக்களம் மற்றும் புத்தசாசன அமைச்சின் அனுமதி மற்றும் நில அளவைத் திட்டம் அவசியம் என தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## நினைவுகூரலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடைவிதித்துள்ளது. கல்முனை நீதிமன்றம் அந்தத் தடையை விதித்துள்ளது.

நினைவேந்தல் நிகழ்வுகளை தடை செய்வதற்கான காரணங்கள் நோய் பரவுவதைத் தடுப்பதிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் புத்துயிர் பெறுவதைத் தடுப்பதாக மாற்றமடைந்துள்ளன.

இது போரின் இறுதிகாலப் பகுதிகளில் இடம்பெற்ற கொடூரங்கள் மற்றும் வன்முறையை நினைவுகூருவதை நிறுத்துவதே ஆளும் தரப்பின் நோக்கம் என்பதை வெளிப்படுத்தியுள்ளன.

மட்டக்களப்பிலும் மக்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சியை பரிமாறுவதை பொலிஸார் தடுத்தனர் எனத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் அந்த பகுதிக்கான இணைப்பாளர் தலையிட்ட பின்னரே அவர்களிற்கு அதற்கான அனுமதியை வழங்கியுள்ளனர். அமைச்சர் டிரான் அலஸ் அவர்களே இது உங்களின் உத்தரவின் கீழ் இடம்பெறுகின்றதா? என்று அம்பிகா கேள்வி எழுப்பியுள்ளார்.

## கடும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜேசு சபைத் துறவி அருட்தந்தை ஜோசப்மேரி, சிவில் சமூக செயற்பாட்டாளர் வி.லவகுமார், தமிழ் அரசுக் கட்சியின் மகளிர் அணி செயலாளர் ஆர்.ஜெயபிரகாஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது ஆலயத்திற்கு முன்பாக கஞ்சி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அங்கு பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டதுடன் பெருமளவு புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டிருந்தனர்.

அங்கு வந்த மட்டக்களப்பு பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலிஸார் அங்கு கஞ்சி வழங்கும் செயற்பாடுகளை செய்யவேண்டாம் என்று அங்கிருந்து அனைத்தையும் எடுத்துக்கொண்டு செல்லுமாறும் பணித்த நிலையில் அதற்கு மறுப்பு தெரிவித்த ஏற்பாட்டாளர்கள் தொடர்ந்து தமது செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் சுகாதார நடைமுறையினை பின்பற்றவும் பொதுச்சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைகள் இன்று கஞ்சி செயற்பாடுகளை முன்னெடுக்கமுடியாது என மீண்டும் தடைகளை ஏற்படுத்துவதற்கு பொலிஸார் முயற்சித்த நிலையில் அங்கு பொதுச்சுகாதார பரிசோதர் ஒருவரையும் அழைத்து வந்து நிகழ்வினைத் தடுப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையில் அங்கு வந்த பொதுச் சுகாதார பரிசோதகர் சுகாதார நடைமுறைகளைப் பேணி செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு தெரிவித்ததைத் தொடர்ந்து சுகாதார நடைமுறைகளை பேணியவாறு கஞ்சி காய்ச்சும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது கஞ்சியைப் பரிமாறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோது விமான நிலைய வீதியின் இரு மருங்கிலும் போக்குவரத்து பொலிஸார் நிறுத்தப்பட்டு வீதியில் செல்வோருக்கு கஞ்சியை பரிமாறும் செயற்பாடுகளை தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

கஞ்சியை பருக வாகனங்களை நிறுத்தியவர்களை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகளை பொலிஸார் முன்னெடுத்திருந்த நிலையிலும் பெருமளவான மக்கள் கஞ்சியை வாங்கி பருகும் நிலைமையை காணமுடிந்தது.

## கல்முனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

அம்பாறை மாவட்டச் செயலாளர் தமிழர்களுக்கு எதிரானவர் என்ற கருத்தை கடந்த நாடாளுமன்ற அமர்வில் பேசிய யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் முன்வைத்தார். கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு எதிராக மாவட்டச் செயலர் செயற்படுகிறார் எனவும் குற்றம்சாட்டினார். அதனை நான் நிராகரிக்கின்றேன்.

அம்பாறை மாவட்டச் செயலர் தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர் என்ற பேதம் பாராமல் செயற்படும் ஒருவர். அவர் அங்கு சிறந்த சேவையை வழங்குகின்றார். அவர் ஓர் அரச அதிகாரி. சட்டத்துக்குட்பட்டுத்தான் செயற்பட முடியும். யாழ்ப்பாணத்தை சேர்ந்த கஜேந்திரனுக்கு அம்பாறை மாவட்டம் பற்றியோ கல்முனை பற்றியோ எதுவுமே தெரியாது.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலக பிரச்சினைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்தான் காரணம். அவர் உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு ஒன்றினால்தான் இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இது தெரியாமல் ஆளும் தரப்புக்கு எதிராகவும் எனக்கு எதிராகவும் குற்றச்சாட்டு தெரிவிக்கின்றனர்.

இதனை ஒரு இனவாத பிரச்சினையாக மாற்ற வேண்டாம். கல்முனை தமிழ் மக்களுக்கு செயலகம் வழங்குவதற்கு நாங்கள் முழு ஆதரவை வழங்குவோம் என்பதை பகிரங்கமாகத் தெரிவிக்கிறோம் - என்றார்.

## மாணவருக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களின் பருவச் சீட்டு மற்றும் சிசு செரிய பஸ் சேவை என்பவற்றிற்காக தனது அமைச்சு மிகப் பெரிய செலவை ஏற்றுக்கொண்டுள்ளது.

தற்போது நாடளாவிய ரீதியில் 1500 சிசு செரிய பஸ்கள் இயங்கி வருகின்றன. திறைசேரியினால் 2024 ஆம் ஆண்டிற்கு அந்த பஸ்களுக்கான கட்டணமாக 2000 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

அண்மைக்கால பொருட்களின் விலையேற்றம் மற்றும் ஏனைய காரணிகளின் அடிப்படையில் தொலைதூர பகுதிகளுக்கு பஸ்களை வழங்குமாறு பெருமளவிலான பாடசாலைகள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும், இது தொடர்பில் தான் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது.

இதன்படி, ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் உள்ள பிரதேச அபிவிருத்திக் குழு உத்தியோகத்தர்கள் இது தொடர்பான யோசனைகளை அனுப்பி வைத்தால், அடுத்த பாடசாலை தவணை முதல் இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வேலைத்திட்டத்தை தயாரிக்க முடியும் என்றார்.

## புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளது.

1967ஆம் ஆண்டின் சட்டவிரோத செயற்பாடுகளைத் தடை செய்யும் சட்டத்தின் மூன்றாம் பிரிவின் முதலாம், மூன்றாம் உப பிரிவுகளினால் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கமைய, விடுதலைப் புலிகளை சட்டவிரோத அமைப்பாக இந்திய மத்திய அரசு 2019 மே 14 பிரகடனம் செய்திருந்தது. அதனை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கான அறிவித்தலை இந்திய மத்திய உள்துறை அமைச்சு நேற்று வெளியிட்டுள்ளது.

# கல்வியியற் கல்லூரிகளை பல்கலைகளாக மாற்றுவதற்கான சட்ட மூலங்கள் தயார்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த அறிவிப்பு

தேசிய கல்வியியற் கல்லூரிகளை மற்றும் பல்கலைக்கழகங்களாக மாற்றுவது தொடர்பான சட்டமூலங்களை உருவாக்கும் பணிகளும் நிறைவடைந்துள்ளது என்று கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நான் கல்வி அமைச்சைப் பொறுப்பேற்ற போது எரிபொருள் வரிசைகளினால் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலையே காணப்பட்டது. விடைத்தாள்களை திருத்துவோருக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கான எரிபொருள்கூட இருக்கவில்லை. 14 மணி நேரமும் மின்வெட்டு காரணமாக, பிள்ளைகள் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமல் இருந்தது. இதற்கிடையில் அவ்வப்போது பாடசாலைகளை மூடிவைக்க வேண்டிய நிலைமையும் காணப்பட்டது.

கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டதால், கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன. சரியான நேரத்தில் பரீட்சைகளை நடத்தி பெறுபேறுகளை வெளியிட முடியவில்லை. பின்னர், பொருளாதார நெருக்கடி வலுவடைந்ததால், கல்வித்துறை கடுமையாக பாதிக்கப்பட்டது.

ஆனால் தற்போது நிலைமை சுமூகமாகியுள்ளது. அதன்படி, இந்த ஆண்டுக்கான பாடப் புத்தகங்கள், சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. பரீட்சைகள் வழமை போல நடத்தப்படுகின்றன.

அதறகாக சாதாரண தர பரீட்சையை டிசம்பரிலும், உயர்தர பரீட்சையை ஒகஸ்டிலும் நடத்த வேண்டியுள்ளது. இது தொடர்பில் மாகாண அதிகாரிகளுடனும் சம்பந்தப்பட்ட தரப்பினருடனும் கலந்துரையாடியுள்ளோம்.

கலந்துரையாடலின் போதான யோசனைக்கு அமையவே செயற்பட்டு வருகிறோம். அதன்படி டிசெம்பரில் நடக்க வேண்டியிருந்த சாதாரண தர பரீட்சை நாளையுடன் நிறைவுக்கு வருகிறது. அதன் பின்னர் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் ஆரம்பிக்கப்படவிருப்பதோடு, உயர்தர பரீட்சைக்கான வகுப்புகளும் ஆரம்பமாகும். இந்த ஆண்டு 452,000 மாணவர்கள் சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றினர். அவர்களில் 388,000 பேர் முதல், இரண்டாவது அமர்வுக்காக பாடசாலைகளிலிருந்து தோற்றிய மாணவர்களாவர்.

அந்த மாணவர்களுக்கு ஜூன் முதல் வாரத்தில் உயர்தர வகுப்புகளில் இணைய வாய்ப்பு கிடைக்கும். அதற்கு தேவையான அமைச்சரவை அனுமதி ஏற்கனவே பெறப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கை 15 ஆம் திகதி வெளியிடப்படும். பரீட்சைகள் நிறைவடைந்த பின்னர் மே மாதம் 20ஆம் திகதி பாடசாலைகளின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

கல்வி நிர்வாக மறுசீரமைப்புச் செயற்பாடுகள் ஆரம்ப கட்டத்தை எட்டியுள்ளோம். இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அதன் சுற்றறிக்கை எதிர்வரும் நாட்களில் வெளியிடப்படும். அதற்கமைய நாடளாவிய ரீதியில் 1220 கொத்தணிப் பாடசாலைகள் உருவாக்கப்படவுள்ளதுடன், அவற்றை மேற்பார்வையிடுவதற்காக 350 பாடசாலை சபைகள் உருவாக்கப்படும்.

தற்போதுள்ள 100 கல்வி வலயங்களும் படிப்படியாக அதிகரிக்கப்படும். பாடசாலை குழுக்களின் அடிப்படையில், 01 - 11 ஆம் ஆண்டு வரையிலான வகுப்புகளைக்கொண்ட பாடசாலைகளுக்கு மாணவர்களை உயர்தரத்திற்கு உள்வாங்கும் அதிகாரம் அதிகாரிகளுக்கு உள்ளது.

இரசாயனவியல், பௌதீகவியல், உயிரியல், கணிதம் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் வெளிநாட்டு மொழிப்பாடங்களுக்கான பட்டதாரி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டுள்ளது. நேர்முகத் தேர்வில் பங்கேற்ற 7,000 பேரில் 3,000க்கும் மேற்பட்டவர்களுக்கு பாடப்பொருத்தத்தின் அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பயிற்சி முடிந்த பின்னர் ஜூன் 1 ஆம் திகதிக்குள் பாடசாலைகளில் இணைக்கப்படுவர். விஞ்ஞான தொழில்நுட்ப பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை ஓரளவுக்கு தீர்க்கப்படும். உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் இடைநிறுத்தப்பட்ட மாகாண ஆசிரியர் நியமனங்கள் தொடர்பான பிரச்சினைகளும் தற்போது தீர்க்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், அதிபர்களுக்கான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருக்கிறது. அதிபர்களின் தொழிற்சங்கங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் அதிபர்களுக்கான கொடுப்பனவுகள், தரம் உயர்த்துதல் மற்றும் ஏனைய சில நடைமுறை விடயங்கள் உள்ளடங்கியுள்ளன.

கல்வி நிர்வாக சேவையில் பல வெற்றிடங்கள் காணப்பட்டன. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அவர்களில் 404 பேரை உள்வாங்குவதற்கான நேர்முகத் தேர்வுகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளன. மேலும், 800 ஆசிரியர் பயிற்றுனர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான இரண்டாவது நேர்முகப் பரீட்சை எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ளது. -என்றார்.

## ஏற்கனவே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கியவர்களில் சில அரச ஊழியர்களும் உள்ளதால், அவர்கள் பணியில் ஈடுபடுதல் மற்றும் ஏனைய விடயங்களில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பேசப்படுவதால்;, உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்து செய்யுமாறு, சட்டமா அதிபர் மற்றும் ஏனைய தரப்பினருடன் கலந்தாலோசித்து நேற்று அமைச்சரவையில் ஜனாதிபதி, பிரதமருக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

அடுத்த தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்கிய விதத்தில் மாகாண சபைத் தேர்தலை முரண்பாடுகளின்றி நடத்துவதற்கு சட்டமா அதிபர், தேர்தல் ஆணையாளர் மற்றும் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி பிரதமருக்கு அறிவித்துள்ளதார் என்றார்.

## பலஸ்தீனர்களுக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடந்துகொள்பவர்களும் இருக்கின்றார்கள். அவர்களின் செயற்பாடு நயவஞ்சகமானவை.

மனித உரிமைகள், சர்வதேச மனித உரிமை சட்டங்கள், இனப்படுகொலை உள்ளிட்ட சர்வதேச குற்றங்கள் தொடர்பில் அவர்கள் பேசுகின்றனர். ஒரு நாட்டுக்குள் இடம்பெற்ற பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில் குறிப்பிட்டு பலஸ்தீன நிலைமை குறித்துப் பேசுகின்றனர்.

பலஸ்தீனத்தில் அதிகளவான மக்கள் கொல்லப்படுகிறார்கள். இவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் சிறுவர்களும் பெண்களும் ஆவர்.

இந்தப் போரைப் பொறுத்த வரையில் ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் இடையேயான மோதலாகும். இலங்கையிலும் இதுபோன்ற நிலைமை ஏற்பட்டது. அதனை உள்விவகாரம் என்றும், சர்வதேச குற்றச் செயல் அல்ல என்றும் கூறியவர்கள் பலஸ்தீன சம்பவத்தை உள்விவகாரம் என்று கூறுவதில்லை.

மே மாதத்தில் முள்ளிவாய்க்காலில் பெருமளவான மக்கள் கொல்லப்பட்டனர். அந்த மக்களை நினைவு கூரும் வாரமாக இந்த வாரம் இருக்கின்றது.

போர் வலயத்திற்குள் 4 இலட்சம் மக்கள் சிக்கியிருந்தனர். அவர்கள் உண்ண உணவின்றி உப்பில்லா கஞ்சியையே அருந்தினார்கள். இதனை நினைவுகூரும் வகையில் அங்கு கஞ்சி பரிமாறப்படுவது வழக்கமாகும். இலங்கையில் போரில் ஏற்பட்ட மக்கள் இழப்புகளை நினைவுகூரும் நாளாகவே இதனைப் பார்க்கின்றோம்.

எமது மக்கள் இறுதி கட்ட போர்க் காலத்தில் கஞ்சியைக்கூட பெற்றுக்கொள்ள முடியாமல் போராடினார்கள். இதனை நினைவுகூர இடமளிக்காமை ஆட்சியாளர்களின் அவல நிலைமையையே எடுத்துக்காட்டுகினறது.

இந்த விடயத்தில் சம்பூரில் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்ட முறையை பார்த்தோம். குறித்த பெண் , ஆண் பொலிஸாரால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

கஞ்சியை அருந்தியதற்காகவே அவரை இழுத்துச் செல்கின்றனர். கஞ்சி விவகாரத்தில் பொலிஸார் நீதிமன்றத்தின் ஊடாக தடையுத் தரவுகளையும் பெற்றுக்கொள்கின்றனர்.

இந்த நேரத்தில் பாலஸ்தீனத்தில் இறக்கும் மக்கள் தொடர்பில் பேசிக்கொண்டு இருக்கின்றோம். ஆனால் இங்கே இறந்தவர்கள் தொடர்பில் நிலைப்பாடு என்ன என்று கேட்கின்றோம். இது இரட்டை நிலைப்பாடு இல்லையா? பலஸ்தீனத்தின் மீது அக்கறை கொண்டுள்ளீர்கள். அந்த அக்கறை எங்கள் மக்கள் மீது இல்லையா? என்று கேட்கின்றேன்.

பலஸ்தீன விடயத்தில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பிலும், சர்வதேச தலையீடு அவசியம் என்றும் கூறும் நீங்கள் ஏன் எமது மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கூறும்போது உள்ளக விவகாரம் என்று கூறுகின்றீர்கள். இது இரட்டை வேடத்தையே காட்டுகின்றது.

போர் என்பது சுத்தமானதாக இருக்க முடியாது. ஒரு சுதந்திரமான விசாரணை அவசியமாகும். ஆனால் இங்கே உள்ளக விசாரணை தொடர்பில் கூறிக்கொண்டு ஒருதரப்பு விசாரணையை முன்னெடுக்கின்றனர்.

இஸ்ரேல் தாக்குதலை நாங்கள் கடுமையாக கண்டிகின்றோம். ஆனால் அதே மனசாட்சியுடன் இங்கு 15 வருடங்களுக்கு முன்னர் நடந்தவை தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும். இந்நிலையில் உள்ளகப் பொறிமுறை என்று கூறிக்கொண்டு ஏன் இவ்வாறு நயவஞ்சகமாகச் செயற்படுகின்றீர்கள் என்று கேட்கின்றேன் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# அரசாங்கம் வழங்கிய அரிசியை உட்கொண்டு 7 கோழிகள் சாவு; தரமற்ற அரிசி விநியோகமா?

## முஜிபுர் ரஹ்மான் கேள்வி



அரசாங்கத்தினால் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட அரிசியை உட்கொண்டு பாணகமுவ பகுதியில் ஏழு கோழிகள் உயிரிழந்துள்ளன. அரசியின் தரம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளை அரசாங்கம் அறிந்துள்ளதா என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போது மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் அரசி வழங்கப்படுகின்றது. விநியோகிக்கப்படும் அரிசியின் தரம் தொடர்பில் கடந்த காலங்களில் பல கேள்விகள் எழுந்துள்ளன.

வழங்கப்படும் இலவச அரிசி தொடர்பில் இன்று (நேற்று) ஊடங்களில் செய்தி வெளியாகியுள்ளன. அதாவது பாணகமுவ பிரதேசத்தில் உள்ள ஒருவர் அரசாங்கத்தால் கிடைக்கப் பெற்ற அரிசியை தான் வளர்க்கும் கோழிகளுக்கு தானியமாக வழங்கியுள்ளார்.இதனை உட்கொண்ட 07 கோழிகள் உயிரிழந்துள்ளன. இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் அறிந்துள்ளதா? என கேள்வி எழுப்பினார்.

இதற்கு எழுந்து பதிலளித்த சபை முதல்வரும்,கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த இந்த கேள்விக்கு உடனடியாக பதிலளிக்க முடியாது.விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்கிறேன்.

அரசாங்கத்தால் விநியோகிக்கப்படும் அரிசியின் தரம் தொடர்பில் கடந்த இருவாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்விலும் கேள்விகள் எழுப்பட்டன. – என்றார். (05)

# மோட்டார் சைக்கிள் ரயிலுடன் மோதி விபத்து: ஒருவர் இறப்பு

மாத்தறை பிரதேசத்தில் மோட்டார்சைக்கிள்ஒன்றுரயிலுடன் மோதி இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் உயிரிழந்துள்ளார் என மாத்தறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யட்டியனபிரதேசத்தைச்சேர்ந்த 56 வயது நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாத்தறையிலிருந்துமருதானை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியே இவர் உயிரிழந்துள்ளார்.

குறித்தமோட்டார்சைக்கிள்ரயில் பாதையைக் கடக்க முற்பட்ட போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# யாழில் கைதிகளை சிறைச்சாலைக்கு அழைத்துச்சென்ற பஸ் கோரவிபத்து

யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு கைதிகளை ஏற்றி சென்ற, சிறைச்சாலைக்கு சொந்தமான பஸ் திங்கட்கிழமை விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஊர்காவற்துறை நீதிமன்றில் வழக்குவிசாரணைகள்முடிவடைந்த பின்னர் கைதிகளை யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு ஏற்றிச்சென்ற போது, நாரந்தனை பகுதியில் முன்னால் சென்று கொண்டிருந்த ஹயஸ் ரக வாகனம் திடீரென நிறுத்தப்பட்டமையால், பின்னால் சென்ற சிறைச்சாலைக்கு சொந்தமான பஸ் மோதி விபத்துக்கு உள்ளானது.

விபத்தில் ஹயஸ் ரக வாகனத்தில் பயணித்த நபர் ஒருவர் காயமடைந்த நிலையில், ஊர்காவற்துறை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்தினை அடுத்து, சிறைச்சாலை பஸ்ஸிலிருந்த கைதிகள் வேறு வாகனத்திற்கு மாற்றப்பட்டு, சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற் துறைபொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# மருதமுனை புத்திஜீவிகளின் பங்கெடுப்புடன் ஹரீஸை சந்தித்த சமூக செயற்பாட்டாளர்கள்





(நூருல் ஹுதா உமர்)

கல்முனைமாநகரமருதமுனைபிரதேசபுத்திஜீவிகள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களுக்குமிடையிலான சந்திப்பொன்று மருதமுனையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஊவா வெல்லச பல்கலைக்கழக பதிவாளர் எம்.எப். ஹிபதுல் கரீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசியல் போக்குகள், மருதமுனை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், சர்வதேச நிகழ்ச்சி நிரலில் முஸ்லிங்களின் பாதிப்புக்கள், இளைஞர்களினதும் கல்முனை பிராந்தியத்தினதும் மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது மருதமுனை பிரிஸ்பன் விளையாட்டுக்கழகம் மற்றும் டில்கோ விளையாட்டுக்கழகம் ஆகியவற்றுக்கு நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து குறித்த விளையாட்டுக்கழக தேவைகளை நிவர்த்திக்குமுகமாக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டுக்கான ஆவணங்களை விளையாட்டுக்கழக நிர்வாகிகளிடம் கையளித்தார்.

இதன்போது இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக பொருளியல் துறை பேராசிரியர் ஏ.ஏ.எம். நுபைல், சட்டத்தரணி அனுஜ் பிர்தௌஸ், சட்டத்தரணி ஏ.எம்.எம்.றிப்கான், சமூக செயற்பாட்டாளரும், இளைஞர் இணைப்பாளருமான எம்.எஸ்.எம்.பௌஸ், நாடாளுமன்ற உறுப்பினரின் ஆலோசகர் எம்.ஏ. கலீலுர் ரஹ்மான், இணைப்பு செயலாளர் சப்ராஸ் நிலாம், மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல்.என்.ஹுதா உமர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதானிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(05)



# கிண்ணியா கிராம சேவை அதிகாரிகள் சுகவீன போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்





( எச் எம் ஹலால்தீன் )



நாடு முழுவதிலும் உள்ள கிராம சேவகர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இரண்டு நாள் சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

கிண்ணியா பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட 31 கிராகிராம சேவை உத்தியோகத்தர்கள் சம்பள முரண்பாட்டை தீர்த்தல், கடமையாற்றுவதற்குரியவசதிகளை ஏற்படுத்திக் தருதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் கிராம சேவை அதிகாரிகளிடம் பல்வேறு தேவைகளுக்கு வந்தவர்கள் தான் பிரச்சினைகளை எதிர்நோக்கியதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

பல கிராம சேவையாளர் பிரிவுகள் வெறிச்சோடி கிடந்தன ஆள்கள் நடமாட்டம் இன்றி நாங்கள் கிராம சேவை அதிகாரிகளிடம் வந்தோம் அவர்கள் ஸ்ரீகாந்த் என்று சொல்கின்றார்கள் எங்களுடைய தேவை நிறைவேற்றப்படவில்லை.

நாங்கள் தூர இடத்தில் இருந்து வருகின்றோம். எனது நோய் சம்பந்தமாக கிராம சேவை அதிகாரி சந்தித்து விவரம் பெற்றுக்கொள்ள வந்தேன் ஆனால் முடியவில்லை மக்கள் தெரிவித்தனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# கனிய மணல் அகழ்வுக்கு மக்கள் தொடர்ந்தும் எதிர்ப்பு தெரிவிப்பு!

## மன்னார் அரச அதிபர் அனுமதி மறுப்பு





மன்னார் மாவட்டத்தில் ஆஸ்திரேலியாவைத் தளமாகக்கொண்டுஇயங்கும்டைட்டானியம்சான்யி; லிமிடெட் நிறுவனத்தினரால்மேற்கொள்ளப்படவுள்ள கனிய மணல் அகழ்வு தொடர்பாக பொது மக்களின் விருப்பத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஓர் அவசர கூட்டம் திங்கட்கிழமை மதியம் 2 மணி முதல் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் டைட்டானியம் சான்யி; லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர் சாலிய உள்ளடங்களாக குறித்த நிறுவனத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

சுற்றுச்சூழல் தாக்கம் தொடர்பான மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்ளும்வகையில், குறித்தநிறுவனத்தினர் தெரிவுசெய்யப்பட்ட இடங்களுக்கு செல்லும் போது மக்கள்தொடர்ச்சியாகஎதிர்ப்பையும்கண்டனத்தையும் வெளிப்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி செயலகத்தின் வேண்டுகோளுக்கு அமைய, பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக குறித்த கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கூட்டத்தில் மன்னார் பிரஜைகள் குழு, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகள்,சமூக மட்ட அமைப்புகள் திணைக்கள தலைவர்கள், கலந்துகொண்டார்கள்.

இதன் போது ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் டைட்டானியம் சான் லிமிட்டெட் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ள கனிய மணல் அகழ்வு தொடர்பாகத் திட்டம் தொடர்பாக மக்களுக்கு முன் வைக்கப்பட்டது. இதன் போது மன்னாரிற்கு குறித்த திட்டத்தால் பாரிய பாதிப்புகள் உள்ளமைகுறித்துமக்களாலும்,பொதுஅமைப்புகளின் பிரதி நிதிகளாலும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்த புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா குறித்த திட்டம் மன்னாரில் அமுல் படுத்தும் பட்சத்தில் மன்னாரில் பாரியைப் பாதிப்புகள் ஏற்படும் என்ற விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

அவரது கருத்தை வருகை தந்த பொது அமைப்புக்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள்,பிரஜைகள் குழுவினர் வரவேற்றனர்.

இதேவேளை மன்னார் தீவில் குறித்த திட்டத்தை அமுல் படுத்துவதை மக்கள் ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் மன்னார் தீவைத் தவிர்த்து வேறு நிலப்பரப்பில் குறித்த திட்டம் தொடர்பான ஆய்வை மேற்கொள்ள அனுமதி வழங்குவது என்றும் மன்னார் தீவில் கனிய மணல் அகழ்வுக்கு ஆதரவு வழங்காத நிலையில் சுற்றுச்சூழல் தாக்கம் தொடர்பான மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்க முடியாது எனப் பொதுமக்கள் உறுதிய உள்ள காரணத்தால் குறித்த கூட்டம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டது.

மன்னார் தீவில் குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாததன் காரணத்தைச் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிக்கை மூலம் தெரியப்படுத்த உள்ளதாக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மேற்படிகலந்துரையாடலில்மன்னார்பிரஜைகள் குழுவின்தலைவர்மாக்கஸ்அடிகளார், பொதுஅமைப் புகளின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் உட்பட சமூக மட்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.(05)

# மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் ஈடுபட்ட 15 பேருக்கு அபராதம்

கடத்த வாரம் பம்பலப்பிட்டி, காலி வீதியில் சட்டவிரோதமான முறையில் மோட்டார் சைக்கிள்களை ஓட்டி பந்தயத்தில் ஈடுபட்ட 15 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

இவர்களுக்கு நீதிமன்றம் 4 லட்சத்து 27 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், குறித்த 15 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களின் சாரதி அனுமதிப்பத்திரங்களை 6 மாதங்களுக்கு இடைநிறுத்தவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.(05)

# யாழில் ஐஸ் போதைப்பொருள் ஆய்வுகூடம் சுற்றிவளைப்பு

## இருவர் கைது

யாழ்ப்பாணம், சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இணுவில் பகுதியில் ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி நிலையம் ஒன்று அதிரடியாக சுற்றிவளைக்கப்பட்டது. இதன்போது இரண்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், அவர்களால் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி செய்வதற்கு பயன்படும் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரின் கண்காணிப்பில் உள்ளனர்.

குறித்த வீடானது ஐஸ் போதைப் பொருள் உற்பத்தி செய்யும் ஆய்வு கூடமாகசெயற்பட்டுவந்ததாகத்தெரிவிக் கப்படுகிறது.

இந்நிலையில் வீடானது சீல் வைக்கப்பட்டுள்ளதுடன் கொழும்பில் இருந்து இரசாயன பகுப்பாய்வாளர்களை வரவழைத்து பகுப்பாய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பிரதான சந்தேக நபர் தப்பியோடியுள்ள நிலையில் அங்கு பணிபுரியும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# சுவாமி விபுலானந்தர் ஆண்டை முன்னிட்டு கணேஷா அறநெறி விளையாட்டு விழா



(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுல அறநெறி பாடசாலைகளில் ஒன்றான திருக்கோவில், விநாயகபுரம் ஸ்ரீ கணேஷா அறநெறி பாடசாலை பிள்ளைகளின் பாரம்பரிய கலை, கலாசாரவிளையாட்டுநிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வு திருக்கோவில் உதய சூரியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. ஸ்ரீகணேசா அறநெறி பாடசாலை நாடத்திய இச் சித்திரை விளையாட்டு போட்டி நிகழ்வு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டுநினைவாக நடை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தின் பணிப்பாளர் கண.இராஜரத்தினம் (கண்ணன்) மற்றும் திருக்கோவில் கோட்ட கல்விப்பணிப்பாளர் சோ,ரவீந்திரன்,ஆசிரியர்களானஜனா, தர்மசீலன் மற்றும் அறநெறி ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.(05)



# சந்நதி – கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் மூன்று நாள்களில் பளையில்: பெரு வரவேற்பு



(வி.ரி.சகாதேவராஜா)

சந்நிதிகதிர்காமம்பாதயாத்திரைகுழுவினர்மூன்று நாள்களில் பளையை சென்றடைந்தனர். அங்கு அவர்களுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை இலங்கையின் மிக நீண்ட பாதயாத்திரை யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பமானது தெரிந்ததே.

நேற்று (செவ்வாய்க்கிழமை) நான்காவது நாள் குழுவினர் இயக்கச்சி சென்று ஆனையிறவு பாலத்தினூடாக உமையாள்புரத்தைச் சென்றடைந்தனர்.

இதேவேளை மூன்றாவது நாள். அன்று துர்காபுரம் துர்க்கை அம்மன் ஆலயத்திலிருந்து பளை அம்மன் கோவிலை சென்றடைந்து தொடர்ந்து பாதயாத்திரை குழுவினர் மீண்டும் பளை நரசிம்ம வைரவர் ஆலயத்தை சென்றடைந்தனர்.

பளை நரசிம்ம வைரவர் ஆலயத்தில் பலத்த வரவேற்பைப்பெற்றது. அங்குஓம்ரீவீநிறுவனத்தினர் பாதயாத்திரீகர்களுக்கு பொதிகளை வழங்கினர்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

## சிறிய ரக உழவு இயந்திரம் ரயிலுடன் மோதி விபத்து

### ஒருவர் உயிரிழப்பு

கொஸ்கொட பகுதியில் துவேமோதர ரயில் கடவையில் சிறியரகஉழவுஇயந்திரம்ரயிலுடன் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன்மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

திங்கட்கிழமை மாலை மாத்தறையில் இருந்து கொழும்பு மருதானை நோக்கி பயணித்த அதிவேக ரயிலில் மோதியே விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த உழவு இயந்திர சாரதியும் அவருடன் பயணித்த நபரும் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சாரதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். தெஹிகஹவெல பகுதியைச்சேர்ந்த 49 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த மற்றைய நபர் மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்கொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## மின்சாரம் தாக்கி 3 வயது சிறுமி சாவு

களுத்துறை மாவட்டத்தில் பயாகல, மக்கொன பகுதியில் மின்சாரம் தாக்கி 03 வயது சிறுமி உயிரிழந்துள்ளார்.

மக்கொன, முங்ஹேன பகுதியைச் சேர்ந்த 3 வயதான சிறுமி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சிறுமி வீட்டில் பாதுகாப்பற்ற மின்சார பிளக்கை தொட்டபோது மின்சார தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் எனப் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சிகிச்சைக்காக பேருவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில்சிறுமிஉயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பயாகல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## நக்கிள்ஸ் வனத்தில் பேஸ்புக் களியாட்டம் 22 பேர் கைது

பாதுகாக்கப்பட்டநக்கிள்ஸ்வனப் பகுதிக்குள் பேஸ்புக் நண்பர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட களியாட்ட நிகழ்வில் கலந்துகொண்ட ஐந்து பெண்கள் உட்பட 22 பேர் கைது செய்யப்படபட்டுள்ளனர்.

இவர்கள் ஹுன்னஸ்கிரிய வன வளஅலுவலகஅதிகாரிகளால்கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

பண்டாரவளை, கொழும்பு, பதுளை மற்றும் கண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 20 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களே இவ்வாறுகைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் பல்கலைக்கழக மாணவர்கள், பாதுகாப்புப்படையினருடன்தொடர்புடையவர் என கூறப்படும் நபரொருவர் மற்றும் தனியார் துறை ஊழியர்களும் அடங்குவர்.

பேஸ்புக்மற்றும்பிறசமூகஊடக தளங்கள் மூலம் இந்த களியாட்ட நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன், வனப் பகுதிக்குள் முறையான அனுமதி பெறாமல் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

வனவளஅலுவலகஅதிகாரிகள் மேற்கொண்ட விசாரணையில், இவர்கள் பாதுகாக்கப்பட்டநக்கிள்ஸ் வனப்பகுதிக்குள்சனிக்கிழமைஇரவு சென்று நிகழ்வை நடத்தியமை தெரியவந்துள்ளது. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.05.2024இல் வெளியிடப்பெற்றது